தேவனுக்கு எதிராகவும், பல்வகை காரணங்களுக்காகவும் விரோதங்கள் நம் உள்ளத்தில் குடியிருக்கலாம். இவ்விதமான எல்லா விரோதங்களையும் தேவனிடத்தில் வெளிப்படுத்த வேண்டும். அப்போது, மனிதன் உள்ளத்தை எது உடைத்ததோ? அதனை மன்னிக்கும்போது, தேவன் அவன் உள்ளத்தைச் சுகமாக்கி விடுதலையாக்குகிறார்.

உடைந்த உள்ளத்தை குணமாக்குவது என்பது தேவனுடைய மிக முக்கிமான கடமையாகும். இது நம்மை பிரதிபலிக்கும் கண்ணாடி மட்டுமல்ல, மாறாக அது நாம் நித்திய ஜீவனை சென்றடைய வழிவகைச் செய்கிறது. கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையால், தேவன் சுகமான உள்ளம் கொண்டவர்களாய் வாழ நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறார்.

மதகுரு ஜான் மேக்டெர்னன் என்பவர் பாதுகாப்பு மற்றும் பிரகடன நம்பிக்கை ஊழியத்தின்நிறுவனர் ஆவார். இவர், இயேசு கிறிஸ்துவின் பன்னாட்டு திருச்சபை சமய மதகுரு நிறுவனத்தில் இணைநிறுவனராகவும்,அமெரிக்க கருவூல துறையில் 26 ஆண்டுகள் ஓய்வு பெற்ற மூத்தவராகவும் இருந்துள்ளார்.மேலும் இவர் விர காமன்வெல்த் பல்கலைக் கழகத்தில் பிஎஸ் ஆகவும் கல்வாரி கிறிஸ்தவ கல்லூரியில் வேதாகமத்தில் முனைவர் பட்டமும் பெற்றிருக்கிறார். 2004இல் தொடங்கிய "நொறுங்குண்ட இருதயம் குணமடைய ஆசீர்வாத ஊழியம்" இப்பொழுது உலகெங்கும் நடத்தி வருகிறார். இவருக்கு திருமணமாகி நான்கு பிள்ளைகளும் ஆறு பேரக்குழந்தைகளும் உள்ளன. பெற்றோர் இணையத் தளத்தையும் நடத்தி வருகிறார்.

**For Free Bible Literature contact:**

JESUS MEDIA NETWORK,

P.O Box 13, Tirupati 517507, AP, INDIA

jesusmedianetwork@hotmail.com

## உள்ளம் நொறுங்குண்டோருக்கான ஜெபம்

பரலோக பிதாவே, நித்திய தேவனே, என் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கிறேன். இயேசு கிறிஸ்து என் பாவத்திற்காக இரத்தம் சிந்தி சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் உயிரோடு எழுந்தார் என்பதை நான் விசுவசிக்கிறேன். இயேசு கிறிஸ்து என் தேவன், என் மீட்பர், என் இரட்சகர், என் பரிசுத்தர், நான் விண்ணுலக வாழ்வில் அவரோடு என்றென்றும் இருப்பேன்.

தேவனே, நீர் என் நொறுங்குண்ட உள்ளத்தை குணமாக்கும். அதுபோல் என் உள்ளத்தை உடைத்தோரை மன்னிக்க அருள் தாரும். என் பயம், ஐயப்பாடு, கொடூரம், வெறுப்பு, மன இறுக்கம், கசப்புத்தன்மை மற்றும் வெறுப்பு, போதை பழக்கத்திலிருந்து விடுதலை, குடி மற்றும் அடிமைத்தனத்திலிருந்து சுகத்தை தாரும். என் பாவ மன்னிப்பிற்காகவும், என் பாவத்தை மன்னித்து நொறுங்குண்ட என் இருதயத்தை குணமாக்க இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பியதற்காகவும் நன்றி. எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என் ஜெபத்தைக் கேளும் பிதாவே.

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்: தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார். (லூக்கா 4:18)

**ஜான் பி. மேக்டெர்னன்**



# இயேசு கிறிஸ்து நொறுங்குண்ட இதயத்தைக் குணமாக்கவே வந்தார்.

கர்த்தருடைய ஆவியானவர் நொறுங்குண்ட இதயத்தைக் குணமாக்க என்னை அனுப்பினார் (லூக்4:18)

கர்த்தருடைய ஆவியானவர் உடைந்து போன உள்ளங்களைச் சீராக்க என்னை அனுப்பினார் (எசா 6:1)



இன்றைய காலகட்டத்தில் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதையும் மனச்சோர்வுகளினால் தற்கொலைகள் நடப்பதையும் காணமுடிகிறது. பொதுவாக, போதைப் பொருள் என்று சொன்னால் நம் நினைவுக்கு வழக்கமாக வருவது போதை மாத்திரை, சரக்கு, புகையிலை, பாக்கு, கஞ்சா மற்றும் போதைப் பவுடர்கள் என்று பல வகைகளில் சொல்லலாம். இவ்வகை தொல்லைகள் ஒரு பகுதி மட்டும் தான். ஆனால், அமெரிக்கா வாழ் மக்களிடையே அதிகமாக அனைத்து வகையான போதை பழக்கங்கள் காணப்படுகின்றன.

இப்போதைப் பழக்கத்தினால் மட்டுமல்லாமல், போதை பழக்கம் இல்லாதவர்கள்கூட சோர்வினாலும், மன அழுத்தத்தினாலும் மற்றும் கவலைகளினால் குமுறும் மக்கள் ஏராளமாக காணப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளுக்குட்பட்டவர்கள் பல்லாயிரக்கணக்கில் வருடம் தோறும் அதிகரித்து கொண்டே செல்கின்றனர். அதோடுகூட தற்கொலைகளும் பல வகைகளில் காணாத வண்ணம் அதிகரித்து வருகின்றன. இவ்வகைப் பிரச்சனைகளால் ஒரு தனிமனிதனின் உடல் வளர்ச்சி மட்டுமல்லாமல் மன வளர்ச்சியையும் அழித்து, மரணத்திற்கு மிகவும் மோசமான வழிகளில் கொண்டு செல்கிறது.

போதை மருந்துகளைப் பயன்படுத்துபவர்களும் நொறுங்குண்ட உள்ளத்தை குணமாக்க முடியும். நொறுங் குண்டு வலியில் இருக்கும் உள்ளத்தை அடக்குவதற்காக மனிதன் தேர்ந்துகொள்ளும் ஒன்றுதான் உள்ளார்ந்த தியானம். இத்தியானத்தினால் உள்ளார்ந்த வலிக்கு குணமும் சமாதானமும் கிடைக்க செய்கிறது. இதனால் தான், இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்ததற்கான முக்கிய காரணம் ஆகும். அவர் நொறுங்குண்ட இதயத்தைக் குணமாக்கவும் அதன்வழி மிகவும் நம்பிக்கையற்ற நம் உள் ளத்திற்குச் சமாதானமும் கொடுக்க வந்தார்.

விவிலியத்தில் உள்ளம் உடையும்போது என்ன நடக் கிறது என்பதை எழுத்துருவிலே நமக்கு எடுத்து இயம் புகிறது. நீங்கள் மிகவும் கடுமையாக உடைபட்ட எலும் பினைப் பார்த்திருப்பீர்கள். அதுபோல், ஆன்மீகத்தில் உடைந்த உள்ளமும் காணப்படுகிறது.

நொறுங்குண்ட இருதயம் என்றுசொன்னால் பொய், கோபம், பயம், ஐயப்பாடு, கொடூரம், வெறுப்பு மற்றும் கசப் புத்தன்மை உள்ளடக்கியதாக அமைகிறது. இந்த உள் ளுணர்வுகள்தான் நெஞ்சுவலி, மனச்சோர்வு மற்றும் போதை பொருள்களின் அடிமைக்கு அழைத்துச் செல்கிறது. உடைந் த உள்ளத்தில் இது போன்ற உணர்வுகளை வெளிக்கொணர் வது வெறும் அடையாளங்கள் ஆகும். ஆனால், உண் மையான பிரச்சனை உள்ளம் பிளவுப்பட்டு கணப்படுகிறது.

**உள்ளத்தை எது உடைக்கிறது**

விவாகரத்து (இது குழந்தைகளுக்குப் பெரிய அழி, தீயவழி (உடல் மற்றும் மனரீதியாக), கைவிடப்படுதல், வெறுத்து ஒதுக்குதல், வெறுப்பு, போர், கருச்சிதைவு, துன் பம் மற்றும் இறப்பு போன்றவை சொல்லலாம்.

நம்முடைய இருதயத்தை நொறுக்க இவ்வுலகம் குறிவைக்கின்றது. ஒருமுறை உள்ளம் உடைந்து விட்டால், புவியில் யாராலும் ஒட்டவைக்கவும் முடியாது. மருத்துவரின் மருந்தால் குணமாக்கவும் முடியாது. சமாதானத்தை தேட சுயவுதவி குழுக்கள் பல நிகழ்வுகளை நிகழ்த்தினாலும் முடியாது. எல்லாவற்றுக்கும் மூலதனம் ஆன்மீகம் காரண–மாகாது. இவ்வகை முயற்சிகள் எல்லாம் உள்ளத்தின் உணர் வுகளை ஓரளவு குறைய அந்த நேரத்திற்குமட்டுமே பயன் படலாம் பயன்படாமலும் போகலாம். ஆனால், இயேசு கிறிஸ் துவால் மட்டுமே இந்த நொறுங்குண்ட இருதயத்தை நிரந் தரமாக குணமாக்க முடியும். நொறுங்குண்ட இதயத்தைக் குணமாக்க, தேவனால் அனுப்பப்பட்ட சிறந்த வைத்தியர் நம் இயேசு கிறிஸ்து ஆவார்.

கை அல்லது கால் முறிவு ஏற்பட்டால், மருத்துவரை ஆலோசித்து உடைந்த எலும்புகளை ஒன்று சேர்க்க முற் படுகிறார். அதுபோல் உடைந்த உள்ளத்தை குணமாக்க சிறந்த வைத்தியர் யார் என்று சிந்திக்க வேண்டும். அவரே இயேசு. அவர் நம்முடைய பாவத்திற்காக மரித்து மீண்டும் உயிரோடு எழுந்த ஒரே வொருவர் என்பதை உணரவேண் டும்.

வேதாகமம் நொறுங்குண்ட உள்ளத்தை "உள்ளம் ஒரு கல்" என்றும், ஆனால், இயேசு கிறிஸ்து குணமான உள்ளத்தை "உள்ளம் ஒரு தசை" என்று கூறுகிறார். இதனை இதய மாற்றுறுப்பு என்றும் சொல்லலாம்.

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப் பேன். (எசேக்கியல் 36:26)

புதிய இதயமானது தேவனோடு ஒன்றிணைந்தது. இது தேவடைய அன்பையும், சமாதானத்தையும் உட்கொண் டது. எனவே, மேலோங்கிய உணர்வுகளும் முடிவுக்கு வந் தது. மனிதன் தேவனின் சமாதானத்தை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு சுதந்திரமாக்கப்பட்டான். பரிசுத்த ஆவியின் வல் லமையால், தேவன் மனிதனை ஆட்கொள்கின்ற பயம், ஐயப் பாடு மற்றும் மனஅழுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார்.

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத் திருக்கிறார். (2திமெத்தேயு 1:7)

தேவன் சுகமான உள்ளத்தில் தன் அன்பையும், சமாதானத்தையும் உட்செலுத்த உருவகப்படுத்துகிறார். நாம் தேவனில் வளரும்போது அவருடைய அன்பும், சமாதா–னமும் நம்மில் வளர்கிறது. தேவனின் அன்பிலிருந்தும், சமாதானத்திலிருந்தும் நம்மை எதுவாலும் பிரிக்க முடியாது. தேவன் நொறுங்குண்ட உள்ளத்தை குணமாக்க இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். எனவே, நாம் தேவனின் அன் பிலும், சமாதானத்திலும் முழுமையோடு வாழ்வோம்.

முதலில் நொறுங்குண்ட உள்ளத்தை குணமாக்க நாம் செய்ய வேண்டியது இயேசுவின் வேதத்தை நம்புவது. தேவன் முதலில் நொறுங்குண்ட நம் உள்ளத்தை குணமாக் குவதற்கு முன், நம் பாவங்களை அறிக்கையிட வேண்டும். பாவம் கடுமையானது, அது மனிதனை தேவனிடமிருந்து பிரிக்கவல்லது.

எனவேதான், தேவன் இப்பிரிவை ஒன்றிணைக்கும் பாலமாக இயேசு கிறிஸ்துவை அனுப்பினார்.

பாவத்தின் சம்பளம் மரணம். ஆனால், அந்த பாவத் தின் நிமித்தம் இயேசு தனது இரத்தத்தை சிந்தி, சிலு–வையிலே உயிர்விட்டு நம் பாவத்திற்கான பரிகாரம் செய் தார். அதாவது மன்னிப்பு மற்றும் சமாதானம்தான் பாவத்திற் கான பரிகாரம். அதுமட்டுமல்லாது தேவனோடு நித்திய ஜீவன் உண்டு என்று வேதாகமம் உறுதியளிக்கிறது. இப் பாவத்திற்கு நிரந்தர தீர்வு வந்தால், தேவன் நம் உள்ளத்தை ஆட்கொள்வார்.

தேவன், நம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித் திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ் வாறாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

இரண்டாவதாக நாம் பிறரை மன்னிப்பது. மன்னிப்பு என்பது பெற்றோரை, நம்மை அல்லது தேவனை உள்ளடக் கியது. இயேசு கிறிஸ்துவினால் தேவன் நம்முடைய பாவங் களை மன்னித்தார். நாமும் அவரைப்போல, நமக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

மனிதனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களை மன்னிப்பார். (மத்தேயு 6:14)

ஒருவேளை ஒரு மனிதன் தனக்கு எதிரான ஒரு சம் பவம் அவன் உள்ளத்தை உடைத்தது என்றால் அதனை அவனால் மன்னிக்க முடியாது என்று நினைப்பானேயானால் அவன் உடனே தேவனை நோக்கித் திரும்பி அவருடைய அருளையும், பிறரை மன்னிப்பதற்கான அன்பையும் வேண்டி நிற்க வேண்டும். ஏனென்றால் தேவன் நாம் மன்னிப்பதற் கான யாவற்றையும் கொடுக்கவல்லவர். இந்த மன்னிப் பானது நம்மையும் உள்ளடக்கியது.

சிலர் தவறு செய்துவிட்டால் கடவுள் மன்னிக்க மாட் டார் என்ற எண்ணம் தோன்றும். இது கருச்சிதைவு செய்யும் பெண்களிடத்தில் தோன்றும் உண்மை. அந்த பெண் தன் தவறை உணர்ந்து, கடவுளிடம் திரும்பி இயேசு என் மீட்பர் என்று சொல்லும்போது தேவன் மன்னிக்கிறார். நொறுங் குண்ட இருதயம் சுகமாக, நாம் தேவனின் மன்னிப்பை ஏற் றுக்கொள்ள வேண்டும்.